உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். பொதுவாகவே, ஒரு புதிய concept–*ஆக அரசின் பங்கோடு ஒவ்வொரு மீன்பிடித் துறைமுகத்திலும்* landing centre *அதாவது தங்குதளத்திலும்,* Management Committee, *அதாவது தங்குதள மேலாண்மைக் குழு, அதேபோல மீன்பிடித் துறைமுக மேலாண்மைக் குழு உள்ளன. இந்த ஒவ்வொரு குழுவும் அந்தந்த இடத்தில் கூடும்போது, அரசு மற்றும் மீனவர்கள் அதாவது* stakeholders, *மீன்பிடி சார்ந்த* allied activities *தொழில் செய்கின்றவர்கள் அவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து, அவர்களை ஈடுபடுத்துவதன்மூலம்தான் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படும், அவர்கள் செய்ய வேண்டியது என்ன, அதற்கு அரசினுடைய நிதியுதவி எவ்வளவு தேவை இருக்கும், அதேபோன்று அரசு முழுமையான அளவுக்கு செய்ய வேண்டிய பணிகள் வரையறுக்கப்பட வேண்டும். இந்தக் கேள்வி வந்தபோதுகூட உடனடியாக* Executive Engineer *அவர்களை அந்தத் தொகுதிக்கு அனுப்பி, அந்தப் பகுதியைப் பார்த்தபோது, அந்தக் கட்டடத்தைப் பொறுத்தவரைக்கும் வலுவாக உள்ளது. சுண்ணாம்பு அடிக்க வேண்டும், அது ஒன்றும் பெரிய விஷயம் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி அந்த இடத்திலே அதுபோன்ற ஒரு நிலை* facelift *அந்த* landing centre *கொடுக்கப்பட வேண்டிய அவசியம் இருந்தால் நிச்சயமாக அரசு அதைச் செய்வதற்குத் தயாராக இருக்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

66—

தென்னை நாற்றுப் பண்ணை

***8212—திரு. மா. கோவிந்தராசு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி பகுதியில் தென்னை நாற்றங்கால் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டம், பேராவூரணி பகுதியில் புதியதாக தென்னை நாற்றங்கால் பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் குறிப்பில் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு அவர்கள்.

திரு. மா. கோவிந்தராசு: வங்கக் கடலோரம் சந்தனப் பேழையிலே துயில் கொள்ளும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு சின்னம்மா அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதியில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை விவசாயம் செய்து வருகிறோம். இங்கே 40 தினங்களுக்கு ஒருமுறை 4 கோடி தேங்காய்களை அறுவடை செய்கிறோம். ஆனால், எங்கள் பகுதியில் தென்னை நாற்றங்கால் பண்ணை இதுவரை அமைக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய கேள்வியை கனிவோடு பரிசீலித்து, தென்னை நாற்றங்கால் பண்ணை ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று பணிவுடன் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 22 தென்னை நாற்றங்கால் பண்ணைகளில் 12 இலட்சம் தென்னங் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து

2017 மார்ச் 22]

விவசாயிகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தென்னங்கன்றுகளின் உற்பத்தி இலக்கு 12 இலட்சம் ஆகும். இதில் 20–2–2017 வரை 8.9 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 3.1 இலட்சம் தென்னங்கன்றுகள் 31–3–2017–க்குள் உற்பத்தி செய்யப்பட்டு, சாதனை இலக்கு அடையப்படும்.

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணிக்கு அருகில் உள்ள பட்டுக்கோட்டையில் அரசு தென்னை நாற்றங்கால் பண்ணை இயங்கி வருகிறது. இங்கு தஞ்சாவூர் மாவட்டத்திற்குத் தேவையான 1,37,100 தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்படுகின்றன. எனவே, பேராவூரணி பகுதியில் புதியதாக மற்றொரு தென்னை நாற்றங்கால் பண்ணை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு அவர்கள்.

திரு. மா. கோவிந்தராசு: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன் அவர்கள்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்ட விவசாயிகள், குறிப்பாக அரூர் தாலுகாவைச் சார்ந்தவர்கள், பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா, தருமபுரி தாலுகா பகுதியைச் சார்ந்த விவசாயிகள் nursery பண்ணைக்குச் செல்ல வேண்டுமென்றால், சேலம் மாவட்டத்திலுள்ள கருமந்துறை அல்லது தருமபுரி மாவட்டத்திலுள்ள திம்மாபுரம் பகுதிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. நமது அரசு, தோட்டக்கலைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்துவருகிறது. பாப்பிரெட்டிப்பட்டி பகுதியிலே ஏற்காடு மலையடிவாரத்தில் வாணியாறு அணை

இருக்கிறது. அங்கு நல்ல மண் தரமும், நீரும் இருக்கிறது. ஆகவே, விவசாயிகளின் நலன் கருதி, தருமபுரி மாவட்டத்தில், வாணியாறு அணையில் ஒரு நாற்றங்கால் பண்ணை அமைத்துக் கொடுக்க வேண்டும். அங்கிருக்கக்கூடிய விவசாயிகளின் நலனுக்காக இந்தப் பண்ணையை அமைத்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில விவசாயிகளின் நலனைக் கருதி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 2016–2017 ஆம் ஆண்டில் அரசு தோட்டக் கலைத் துறையின் மூலம் தோட்டக் கலைப் பண்ணைகளின் வாயிலாக 498 இலட்சம் நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்குட்பட்ட கோளையம்பள்ளியில் 2013 முதல் 2.73 ஹெக்டேரில் அரசு தோட்டக்கலைப் பண்ணை செயல்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்ட விவசாயிகளின் தேவைகள் இப்பண்ணையின்மூலம் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. மேலும், விவசாயிகள் கோரும் கன்றுகள் மற்றும் நாற்றுகள் உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனைத்தவிர, அருகிலுள்ள சேலம் மாவட்டத்தில் 6 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளும் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகள் தங்கள் தேவைக்கேற்ப பழக்கன்றுகள் மற்றும் காய்கறி நாற்றுகளை அங்கிருந்து பெற்று பயனடைந்து வருகின்றனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாள் அமைச்சராவார். அந்த மாவட்டத்தின் நலன் அவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அவருடைய கருத்தை ஏற்று, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அவருடைய கோரிக்கை குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.